உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தகுருவர்ய்யாயநமஃ

ஞானபேதவிளக்கம்.

இஃது,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

சூளை,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை:

வெள்ளையநாடார் அச்சுயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1887.

உ

<u>இப்புஸ்தகத்தில் அடங்கியுள்ளதுகளின் விவரம்</u>

1. ஞானவேதவிளக்கம் (சோமசுந்தரநாயகரவர்க

2. ஞானவேதவிளக்கக் கட்குருவளி (ஸ்ரீநிவாசய்யங்கா

3. விபரீதஞானாதிக்கிரமமயக்கு ஞானவேதத் தெளிவு } ஆ. அப்பாஸ்வாமி எழுதியது

4. ஞானவேதவிளக்க நிர்ணய ஸமாதானம் } — ஷை

5. துர்வாத நிக்கிரகம் ஆகிய ஞானவேதத் துணிவு } — ஷை

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தகுருப்யோந்நமஃ

ஞானபேதவிளக்கம்.

காப்பு.

நால்வித ஞான நாட்டுதற் கமலன்
பால்வரு மானை பதந்துதித் திடுவாம்.

ஞானம் என்பது அறிவு என விளங்கும். என்ன வறிவு என மேல்வினா வெழுங்கால், பாசவறிவு, பசுவறிவு, பதியறிவு என்னும் விடையுண்டாகும். உலகில் யாவர்கூறு ஞானங்களும் இந்த மூன்றிலடங்கும். இங்ஙனங்கூறுதல் சைவராகிய எம்மபரிபாஷை. தேகமுதலிய ஜடப்பொருள்களையன்றி வேறு சித்துப்பொருளில்லையென்று அறியும் அறிவே பாசஞானம். ஆன்மாவாகிய சித்துப்பொருளையன்றி வேறு ஜடசித்துப்பொருள்களில்லையென்று அறியும் அறிவே பசுஞானம். ஜடப்பொருள்களை உடைமையாகவும், ஆன்மசித்துப்பொருள்களை அடிமையாகவுங்கொண்டு அசைப்பித்தும், அறிவித்தும் இயங்கும் பரமான்மாவாகிய சித்துப்பொருளையறியும் அறிவே பதிஞானம். "பாசஞானம் பகர்பசுஞானம், ஈசஞான மென்னமூன்றுளவாம்" என்றார் பெரியோரும். பிறமதத்தர் தத்தமக்கியைந்தவாறே கூறுப.

பாசம் ஜடமாகையால், அது ஒன்றினையும் அறியாது. பதி நிர்மலசித்தாகையால், அதுவும் ஒன்றினையும் அறியாது. பசுவானது மலசித்தாகையால் பாசத்தோடுசேர்ந்து பாசமாயும், பதியோடுசேர்ந்து பதியாயும் விளங்கும்.

உண்மையில் பசுவானது பாசமுமல்ல, பதியுமல்ல. பதியை ஸத்தென்றும், பாசத்தை அஸத்தென்றும் வேதங்கள் கூறலால், பசுவானது ஸத்தை அறிந்து ஸத்தாயும், அஸத்தை அறிந்து அஸத்தாயும் விளங்கும். இதனால் அது ஸதஸத்தென்னும் பேர்பெற்று ஸத்துமாகாமல், அஸத்துமாகாமல் நிற்கும். இந்த விசாரத்தால், அறியும் விவகாரம் பசுவுக்கேயென்று வெளிப்பட்டது. அங்ஙனமறிகையில், தேகேந்திரிய பிராணாந்தக்கரணாதிகளையும், இவற்றோடுகூடிய தன்னையும், இவைகளைநீக்கித் தனக்குபகரிக்கும் பதியையும் அறிவதுண்டாகையால், இப்படியறியு மறிவுகளே பாசஞானம் - பசுஞானம் - பதிஞானம் என்னும் பேர்பெற்றுநிலைக்கும். இவற்றையறியுங்கால், "பாச மகமல்ல பசுவே யகங்கண்டா, யீச னகமல்லவென்றறிந்தே - யீச, னகத்தையே பாவித் தகற்றாய் சிவோக, மகம்பாவ மாமதுவு மற்று" என்னும் உண்மையநுபவங் கைகூடும். பசுவானது பாசத்தை அறிவதனாலே அந்தப் பாசம் பசுவைவிட்டு விலகமாட்டாது. பசுவாகிய தன்னையறிவதனாலே தான் பாசத்தை யொழித்துக்கொள்ளமாட்டாது. பதியையறியுமஃதொன்றினாலே அப்பதி பசுவுக்குப் பாசத்தைவிலக்கி யின்பத்தையளிக்கும். பாசத்தையும், பசுவாகியதன்னையும் பசுவறிதல் அவற்றின் றன்மையறிந்துதள்ள. பசுவினது பரிபாகமு மவ்வவ்வளவினிறுத்துகையால். சத்திநிபாதர்க்கன்றிப் பதியையறிதல்கூடாது. பதியாகிய சிவன் சுட்டறநின்று தன்னையறிவிக்குங்கால், அங்ஙனமறியுமறிவு நால்வகைப்படும். அவை கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல் - நிட்டை என்பன. இவை சிரவணம் - மநநம் - நிதித்யாஸநம் - ஸமாதி எனவும்படும். இவைகளையே "சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம், பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம், உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானம், தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்" என்று அருண்மொழித்தேவர் கூறினர். இதில் முதலடியில் (சிந்திக்குஞானம்) என்னும் மநநமும், இரண்டாவதடியில் (பாங்

கினிலோங் கியஞானம்) என்னும் நிதித்யாஸநமும், மூன்றாவதடியில் (கலைஞானம்) என்னுஞ் சிரவணமும், முடிவில் (மெய்ஞ்ஞானம்) என்னும் ஸமாதியுந் தெள்ளிதின்விளங்கும். இவ்வாறு பொருள்கொள்ளவறியாதார் ஞானம் இரண்டேயெனவும், நாலு யாண்டுங் கண்டதுமில்லை, கேட்டதுமில்லையெனவும் இறுமாந்து, தாம் கண்டதும், கேட்டதுமாகிய பரம் - அபரம் என்பவைகளைக் கூறிக் களித்திடுவர். பரம் - அபரம் என்று ஞானபேதங்களை யாமுமங்கிகரித்திருக்கின்றோம். ஸ்ரீசேக்கிழார்கூறிய ஞானப்பாடலி லதுசேராதென்பதே துணிவு. பூர்வபட்சிகள் தங்கள்கோள் குணப்படுதற்குத் திருத்தணிகைப் புராணம் - அகத்தியனருள்பெறுபடலம் (கூ௫கூ) வது பாடலை ஆதாரமாகத்தேடிக்கொண்டனர். அது "மேவருஞான மிரண்டவற் றொன்று விமலனார் பாததா மரையே, யோவறு மன்பி னுணர்திரு வளிக்கு மொப்பிலா வுயர்கலை ஞானந், தாவரும் பவத்தை வேரொடுங் களையுந் தக்கமெய்ஞ் ஞானமொன் றிவற்றாற், சாவதும் பிறப்புந் தணப்புறச் சிவத்தைச் சார்ந்தது வாய்நிற்றல் யோகம்'' என்பது. இந்தப்பாடல் (சிவனடியேசிந்திக்கும்) என்னும்பாடலுக்கு உரையாகக்காணப்படலால், இந்தப் பொருளே அதற்குரியபொருளெனவும் அவர் உறுதிகொண்டிருக்கின்றனர். ஸ்ரீகச்சியப்பத்தம்பிரான் சுவாமிகள் கூறினாராகலின், இஃதிழுக்காதென யாழ்ப்பாணிகளுள் பெரும்பாலார் தழுவிவந்திருக்கின்றார்கள். தொண்டைமண்டலத்தார்பலர் அங்ஙனங்கூறாது நாலுவிதஞானங்களென்றே எழுதியிருக்கின்றார்கள். இவ்விரண்டுவிதங்களில், தொண்டைமண்டலத்தார்கூற்று எம்மகூற்றிலேதானே அடங்கியது. யாழ்ப்பாணிகள் மயங்கியவாறு அவர் சொல்வழிப்பட்டுத் தொண்டைமண்டலத்தாருள்ளுஞ் சிலபாலிசர் மயங்கிக்கெடுகின்றார்கள். தொண்டைமண்டலத்தாராகிய கச்சியப்பமுனிவர் முரணிக்கூறியதென்னெனின், யாம் ஈழநாடு-தொண்டைநாடுகளைத் தாழ்வும், உயர்வுங் கூறவந்ததில்லை. அதிகாரிகளிருக்குமிடங்களைக் காட்டவந்ததே அதுவாம். குற்றமுங்குணமும் எந்தநாட்டாரிடத்திலுமுள.

இதுநிற்க, தம்பிரான்கூறியது தவறுடையதோ, அல்லதோவென்பதனை இனிக்கூறுதும். ஸ்ரீசேக்கிழார்கூறியதில், சிவஞானம் - பாங்கினிலோங்கியஞானம் - கலைஞானம் - மெய்ஞ்ஞானம் என ஞானப்பிரயோகம் நான்குமுறைவந்தது. தம்பிரான்கூறியதில், கலைஞானம்-மெய்ஞ்ஞானம் என ஞானப்பிரயோகம் இரண்டுமுறைவந்தது. சேக்கிழார் அதிகமாகக்கூறிய சிவஞானம் - பாங்கினிலோங்கியஞானம் என்பவை தம்பிரான்கூறியபாடலில் அபாவமாயின. அபாவமன்று, அந்தர்க்கதம் எனின், அந்தர்க்கதமாக்கி இரண்டேயாகமுடிக்கக்கூறியதை மிகைபடக்கூறிச் சேக்கிழார் வெற்றெனத்தொடுத்தார் என்பதற்கிடஞ்செய்கின்றது. அன்றியும், சிவஞானமே கலைஞானம் என்று வெளிப்பட்டுக் கலைவல்லவர்களெல்லாஞ் சிவஞானிகளாதலும்பெறும். பாங்கினிலோங்கிய ஞானமே மெய்ஞ்ஞானம் என்று வெளிப்பட்டு, அகம்பிரமஞானம் மெல்லநுழைய இடம்பெறும். மேலுந் தம்பிரான்கூறியபொருளில், (உவமையிலாக்கலைஞானம்) என்பதற்கு (சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகுசிவஞானம்) இலக்கணமும், (உணர்வரியமெய்ஞ்ஞானம்) என்பதற்கு (பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கியஞானம்) இலக்கணமும் ஆகின்றன. சேக்கிழார்கூறியபாடலில் (சிவஞானம்) என்பதற்கு (சிவனடியேசிந்திக்குந்திருப்பெருகும்) என்பது இலக்கணமும், (பாங்கினிலோங்கியஞானம்) என்பதற்கு (பவமதனையறமாற்றும்) என்பது இலக்கணமும், (கலைஞானம்) என்பதற்கு (உவமையிலா) என்பது இலக்கணமும், (மெய்ஞ்ஞானம்) என்பதற்கு (உணர்வரிய) என்பது இலக்கணமும் ஆகின்றன. முன்னரிலக்கணங்களையும், பின்னரவற்றையுடைய ஞானங்களையுங் கூறியநலம் ஸ்ரீசேக்கிழார் திருவாக்கினிதுபெறப்படலால், இவற்றில், தனித்தனி இலக்கணங்களைப்பெற்று விளங்கு மிரண்டுஞானங்களைச்சிதைத்து, அவைகளையுமிலக்கணமாக்கி ஏனைஞானங்களின்மேல் பளுவேற்றுதல் சுமக்கமுடியாத பெரும்பாரமாகவேமுடியும். இப்படியலக்கண்பெற்றழிதலால், தம்பிரான்கூறியபொருள் சேக்

கிழார் திருவாக்கிற்சேர்ந்து அமையாது. இதனால், தம்பிரான்கூறியது சேக்கிழார் திருவாக்குக்கு அர்த்தம் என்று பிரஸ்தாபித்து அநர்த்தத்துக்குக் கொண்டுவருவது பூர்வபட்சிகளுக்கு அபராதமாகவேமுடியும். சேக்கிழார் திருவாக்கை யநுஸரித்துக்கூறினார் தம்பிரான் என்பது அஸங்கதம். இப்படித் தம்பிரான்வாக்குப் பரிஹாரத்தைப்பெறலால் சேக்கிழார்பெருமான் கூறியவை நாலு ஞானங்கள் என்றே தீர்மானிக்கவேண்டியது. ஞானம் நாலு என்பதற்கும், அவை கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல்-நிட்டை என்பவைகளுக்கும் எங்கே பிரமாணம் எனின், "கேட்டலுடன் சிந்தித்த றெளித னிட்டை கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்" என்னுஞ் சித்தியாரிற்காண்க. இந்தப்பிரமாணத்தை அசைக்க ஒருவராலும் முடியாதாகையால், "ஞானம் நாலு என்பதை யாம் யாண்டுங் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை" என்று இறுமாந்து கூறிய சீரியர் பூரியராயினர். ஞானம் பரம்-அபரம் என இரண்டேயெனக்கூறி, அதற்குப் பிரமாணமாகச் சேக்கிழார்வாக்கைச் சாட்சிகாட்டும் ஆதருங் கேதராயினர். இரண்டேஞானம் என்று சாதிப்பதற்கு நாலுமுறை ஞானத்தைக்கூறும் வாக்கைப் பிரமாணமாகத்தேடியது (பஞ்சபாண்டவரென்று லறியேனு கட்டிற் கால்போல) என்று தொடங்கிக்கூறும் பழமொழியையே நிதரிசனமாகப்பெற்றது. சீகாழிபுராணத்தில் "படைத்தளித் தழிக்கு நிறைபரம் பொருளுட் படரிரு ஞானமு மாங்கே-கிடைத்தனர்" எனக் கூறப்பட்டமையால், இரண்டுஞானங் கூறுதல் ஸாமஞ்சஸமெனின், அதனை விளக்குதும். "துடைத்தலு ஞான போனகமுண்ட் தோன்றலா ரான்றபல் கலைக, ளிடைப்புணர் ஞானந் தோய்ந்துதோய் வின்றி யெவ்வுயிர்க் கண்ணுமோர் நிலையே, படைத்தளித் தழிக்கு நிறைபரம் பொருளுட் படரிரு ஞானமு மாங்கே, கிடைத்தன ரொருதன் முதையு மாங்கே கிட்டினார் சிறிதுளம் வெகுண்டு" என்றபாடலே எடுத்துக்கொண்டபிரமாணம். இதில், "பல்கலைகளிடைப்புணர் ஞானந்தோய்ந்து" என்பதொன்றும், "பரம்பொருளுட்படரிருஞானமுமாங்கேகிடைத்தனர்" என்பதொன்றுமாக இரண்டு ஞானங்கள் ஏற்படுகின்றன. இந்தப்

பாடலில், தோய்ந்து என்பதை முதன் ஞானத்துக்குப் பயனிலையாக்காமல், "தோய்ந்துதோய்வின்றி" எனத் தொடங்கிப் பரனியல்பைவிளக்கி, அம்முதன்ஞானத்துக்கும், இரண்டாவதுஞானத்துக்கு மோரேபயனிலையாகக் (கிடைத்தனர்) என்பதைக் கொண்டாலோவெனின், பரனியல்பை விளக்குகையில் "தோய்ந்து" என்பதனோடு "நிறைந்து" எனவொன்று பின்றொடர்கின்றமையானும், பிறவாற்றானும் அதுகூடாது. (தோய்ந்து) என்பது முதன்முடிவும், (கிடைத்தனர்) என்பது இரண்டாவது முடிவுமாதலே அமைவுடைத்து. இனி அந்தப்பாடலில் இரண்டாவதுபோந்த பிரயோகத்தில் "பரம்பொருளாகிய சிவம் உள்ளேநிறைந்து ஸாக்ஷாத்கரிக்கும் பெரியஞானம்" என்று பொருள் கொள்ளவறியாது "சிவம் உள்ளேபடர்ந்து விளங்கும் இரண்டுஞானம்" என்று பொருள்கோடல் அஸங்கதம். எடுத்துக்கொண்டபாடலில், முதன்ஞானம் (தோய்ந்து) என்பதைக்கொண்டும், இரண்டாவதுஞானம் (கிடைத்தனர்) என்பதைக்கொண்டும் அதிகநயத்தோடு முடிதலால், இவற்றின் முடிவுகளைக் காணவறியாமல் ஒன்றை மற்றொன்றிலேசேர்த்துக் குழப்புதல் குழறுபடை ஞானமேயாம். இப்படிக்கன்றி வேறு எந்தவிதமாகமுயன்று (இருஞானம்) என்பதற்கு இரண்டுவிதஞானம் என்று சாதிக்கப்புகுவதுந் தலைதிருகி வீசப்படும். அன்றியும், (இருஞானம்) என்றவிடத்தில், பெரியஞானம் என்று பொருள்கூறாமல் இரண்டுஞானம் என்று பொருள்கூறுவது தெருஞானமேயாகும். ஏனெனில், "இடைப்புணர்ஞானம், படர்ஞானம்" எனச் சேர்ந்து மூன்று ஞானங்களாக முடிந்து முரணுகையால். பாட்டுக்கு அர்த்தந்தெரியாத பாலிசர்களெல்லாம் பண்டிதராகின்ற காலமிதுவாகையால், உலகில் விபரீதம்நிகழ்வது அதிசயமன்று. இதில் விவேகிகள் பிரமியார்கள்.

இனி யிந்தப்பாடல் மேலேபிரஸ்தாபித்த தம்பிரான் சுவாமிகள்பாடலோடு சேர்ந்து உறவாடுகிறதா என்ப

தைக் கொஞ்சம் பரியாலோசிப்பாம். தணிகைப் புராணக்காரர் (கலைஞானம் - மெய்ஞ்ஞானம்) எனக்கூறி "கலைஞானம்" சிவனுடைய சீபாதத்தையுணரு முணர்வைத் தருவது எனவும், "மெய்ஞ்ஞானம்" பவத்தை வேரறக் களையும் பெற்றியைத்தருவது எனவும் விளக்கினர். சீகாழிபுராணக்காரர் (ஆன்றபல் கலைக ளிடைப்புணர் ஞானம்-பரம்பொருளுட் படரிரு ஞானம்) எனக்கூறி முடித்தனர். இரண்டு நூற்காரருஞ்சொன்னவை ஒன்றோடொன்று பொருந்தியிருக்கின்றனவோ, பொருந்தாமலிருக்கின்றனவோ வென்பதை விவேகிகள் கணிக்கவேண்டியது. இரண்டையும் ஒட்டியுரைப்பது கம்பன் விறகுதலையன்பாட்டுக்குப் பொருள்சொன்னதையே ஒக்கும். தத்தமக்கிசைந்தவாறேகூறும் பின்னவர்கள்வாக்குகள் எடுத்துக்கொண்ட பிரமேயத்தைச் சாதிக்கவலியற்றனவென்றறிக. புராணங்களிரண்டினும் போந்த இரண்டுபாடல்களையுங்கூடச் சேக்கிழார்கூறிய நாலுவிதஞானத்தில் ஸமந்வயப்படுத்திக் கூறிமுடிக்கலாம். அதுசெய்தல் கிலுஷ்டகல்பநமாகுமாகையால், இம்மட்டிலுபரதியன்டந்தாம். யாவர் கூறும்பொருளுஞ் சித்தியாரில் விரோதித்து அலக்கணுறுமேல், அவை ஸர்வஸம்பிரதிபந்நமாதல் யாங்ஙனம்? யாம் சேக்கிழார் திருவாக்கில் சொற்பொருத்தங்களோடு சித்தியாரைப் பிரமாணமாகத்தீட்டி யுண்மையைக்காட்டி நாட்டினேமாகையால், அழுக்காறும், துரபிமானமுமொழிந்து அவ்வுண்மையை விவேகிகள் தெளியவேண்டியதே.

அன்றியும், "పురాణమిత్యేవ న సాధు సర్వం। న చాపి కావ్యం నవమిత్యవద్యం। సంతః పరీక్ష్యాన్యతరద్భజంతే। మూఢః పరప్రత్యయనీయబుద్ధిః" என்னும் வசனத்தை நம்மவர்கள் சற்று யோசிக்கவேண்டியது. இதில், புராணமென்று ஸர்வமும்நல்லதாகாது. காவியம் நூதனமானதாகையால், அது குற்றமுள்ளதென்று ஸத்துக்கள் தள்ளமாட்டார்கள். புராதனமாயுள்ளதையும், நூதனமாயுள்ளதையும் நன்றாகப்பரிக்ஷித்து,

எது சரியானதோ, அதையே பிரமாணமாக ஸத்புருஷர்கள் எடுத்துக்கொள்வார்கள். மூடனானவன் அன்னியன்சொன்னதையே தெரியாததன்மையால் நம்புவான் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் திருவாக்குக்கு இதுவரையில் யாருங்கூறுதபொருளேயே யாம் எடுத்துச்சொல்வதாகத் தோன்றினாலும், யாம் சொல்வது யுக்தமாகத்தோன்றும் பட்சத்தில்,இதனேயே யுறுதியாகப்பற்றி மகிழ்ந்து பலனடையாமல் அவர்கள்சொன்னார்கள்-இவர்கள் சொன்னார்கள் என்று பிறருக்கு நிந்தையேற இடஞ்செய்வது மரபல்ல. கங்கைக் கரையி லிருந்துகொண்டு கிணறுவெட்ட முயலுவதும் அழகல்ல. தக்கநியாயங்காட்டி எம்மநிரூபணத்தைப் பூர்வபட்சஞ்செய்கிறவரையில் எமது ஸித்தாந்தம் ஸத்தியமென்பது ஸித்தம். எமதுஸித்தாந்தம் யாண்டும் ஸித்தாந்தமேயாகையால்,பூர்வபட்சிகள்மனம் புண்படாமல் உண்மையையுணர்வாராக.இப்படி யாம்அதிககம்பீரமாகவுரைப்பது அறியாமை, அகங்காரம் இவைகண்மேலிட்டல்ல, நியாயமேற்கொண்டு. அறியாமையும், அகங்காரமுமேற்கொண்டு "கொடிறும் பேதையுங் கொண்டது விடா" என்றபடி முரணிக்கூறும் அஸங்காத்மவாதத்தையே மீண்டழித்தலெமக்குமரபாயிற்று. யாம்ஸர்வஜ்ஞரெனவாவது,ஸர்வகலாஸம்பந்நரெனவாவது எம்மையெண்ணி விவகரிப்பதின்று.ஸ்ரீகச்சியப்பமுனிவர்முதலிய சிவஞானச்செல்வர்களுக்கு அன்புபூண்டு, அப்பெரியோர்களுக்கும், அன்னோர் திருவடிகளே யாச்சிரயித்துவாழும் ஏனையடிப்வர்களுக்குங் குற்றேவல்செய்தொழுகும் அருந்தவங்கிடைத்த செருக்கொன்றினேயேயுடையேம். இப்பெரும்பேற்றின் பயனே அருண்மொழித்தேவர் திருவாக்கினுண்மையையறிவித்தது.அதனேயே யாமுலகறிய வெளியாக்கினேம். கரும்புகசப்பது நாவின்குற்றமாயிருப்பதுபோல நம்மவர்கள் உண்மையைநாடா திழிந்தால், யார் என்னசெய்யலாம்? இன்று இல்லையேனும், என்று மில்லையெனல் கூடாதாகையால், அன்னே ரிவ்வுண்மையைத்தெளிந்து

குணப்படுமாறு திருவருளைச் சிந்திக்கின்றோம். புறச்சமயிகளாயின், காற்கடைகொண்டொதுக்கிவிட்டப் பின்னிட்டேம். சிவனிடத்தும், அடியார்வேடத்தினிடத்து மபிமானம்பூண்டியங்கு மரிய ஸம்பத்துக்குரியராகப் புலப்படுகின்றமையால், யாம் அஞ்சுகின்றனம். புறச்சமயிகளோடு மாரடித்துக்கொண்டு போராடுகிறதுபோல், இவர்களோடுங் காலங்கழிப்பது சரியல்ல. இனி நம்மவர்கள் அவ்வளவுக்கிடமுஞ் செய்யார்கள்.

இதுநிற்க, சிலபெரியோர்கள் நாலுவிதஞானங்களை அந்தப்பாடலில் ஒப்பினார்களென்று மேலேகூறினோம். அம்மட்டி லவையுடன்பாடேயன்றி, அவை இவையிவையென்று விளக்கியவிளக்கம் உடன்பாடில்லை. ஏனெனில், அவர்கள்காட்டிய விளக்கம் ஓர் தக்கபிரமாணத்தைத் தழுவி வெளிப்படாமையால். அன்றியும், ஒருவர்கூறியபடி யொருவர்கூறுமையால், இன்னோர் ஞானம் நாலு என்பதில் விபரீதஞ்செய்யாமையால், ஞானம் இரண்டேயென அந்தப்பாட்டிற் சாதிக்கப்புகுந்தவரின் மிக மேலானவர்களென்னத்தட்டில்லை. ஞானம் இரண்டு, நாலு, பத்து என்று பலவாறு தத்தமக்குத் தெரிந்தவரையில்கூறும் பெரியோர்களை யாம் அறைகூவி இடிக்கவந் ததில்லை. உண்மைகண்டபிறகுந் தாம் பிடித்ததுமேற்கொண்டு சலஞ்சாதிக்குஞ் சண்டாளரையே தடியத் தலைப்பட்டதென்க. இதனால், மேலோர்கள் எம்மைக் குற்றங் கூறுர்களென்பது திண்ணம். குற்றங் கூறுவார் சிலரோவென்பது சொல்லாமே யமைதலால், அவர்கள் பிதற்றை யோர்பொருளாகக்கொண்டு யாம் வருந்தோம். யாவராயினும், உண்மை கடைப்பிடித்து நலத்தை நாடுவரேல், அவரே எமக்குற்ற துணைவரும், யாம் வணங்குமடிகளுமாவர். யாம் வெளியிட்டிருக்கும் ஆசாரிய பிரபாவத்தில், (சிவனடியே சிந்திக்கும் - பவமதனையறமாற்றும்-உவமையிலா-உணர்வரிய) எனப் போந்த விசேடணங்களுக்குத் தக்க நயங்களெழுதி யிருக்கின்றோம். அவைகளைப் பார்

த்தபிறகும் விபரீதம் நிலைப்பது ஆச்சரியம்! அவைகளை யும்,மற்றும் அவ்வகளை யநுஸரித்துவிளக்கியிருக்கும்வா ய்மைகளையும், கூரேச விஜயபங்கம் (க0கூ) வது பக்கத்தில் வரைந்திருக்கு ஞாயங்களையும் இனியேனுங் கூர்ந்து சித்தஸமாதானத்துடன் பார்த்து மகிழ்வாராக.

ஞானம் ஒன்று எனவும், இரண்டு எனவும், மூன்று எனவும், நாலு எனவும் நூல்களிற் காணலாமாகை யால், அவற்றின் ஸந்தர்ப்பங்களையறிந்து இடத்துக்குத் தக்கவாறு பொருள் கொள்ளவேண்டும். அங்ஙனமின்றித் தனித்தனி ஒன்றே - இரண்டே என்றது முதலிய ஆபா ஸவழிகளில் உத்தமராயுள்ளபேர் ஸஞ்சரிப்பது கூடா து. யாவையுந் தழுவுவது எம்மமுடிவாகையால், எமது முடிவில் பிறர்கூறுவன அடங்கியும், அவர் கூற்றில் எமது முடிவு அடங்காமலும், அவர் கூறுவன வியாத்தி வியாப்பியங்களும், யாம் கூறுவது வியாபகமுமாக நிலை த்தன. இவ்வுண்மைகளை யின்னும்விரிப்பதில் விஶ்ராந் தியடைந்தோம். சுபம்! சுபம்!! சுபம்!!!

வாழ்த்து.

வாழ்க ஞானசம் பந்தன் மலர்க்கழல்
வாழ்க நால்வித ஞானங்கள் வண்பொழில்
வாழ்க மாதுமை மாதவன் மாதவர்
வாழ்க நீற்றெழில் சைவமும் வாழ்கவே.

மெய்கண்டான் றிருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.